இடைச்சொற் பொதுவிலக்கணம் – பழையவுரைகள் ஒப்பீடு

General Grammatical on Interjection – Comparison of Old Texts

வே.விக்னேசு / V.Vignesh[1]

Abstract

The *Tolkappiyam* is the only grammar book that demonstrates the antiquity, excellence and glory of the Tamil language. There are seven old commentaries on the *Tolkapiya*. The reason for the proliferation of the text of Tolkappiyam is the result of the efforts of many commentator from time to time to understand the heart of Tolkappiyam and convey it to the world. Commentator's interpretations are an important factor in the preservation of Tolkappiyam and the spread of Tolkappiyam education. Among the Tolkappiya Sholladhikaram, Ilampuranar, Senavariyar, Nachinarkiniyar, Deivachilaiyar, Kalladanar, and one old writer. The *Tolkappiya* texts contradict each other. If we compare and analyze those texts, we can easily understand the inner thoughts of the author Tolkappiyar. If we compare and examine the old texts with the formula that states the general definition of the interjection in the solladhikara interjection, it will become clear what Tolkappiyar's opinion is. Since it is clear what Tolkappiyar's opinion was, this article attempts to compare and examine the common definition of interjection and the explanations given by older commentators.

Date of submission: 2025-07-10
Date of acceptance: 2025-07-18
Date of Publication: 2025-07-23
Corresponding author's Name: V.Vignesh
Email: vignesh@psgcas.ac.in

Keywords: *Tholkappiyam*, Sollathikaram, Ilakkanam, Tholkappiyar, Theivachilaiyar, Ilampuranar

ஆய்வு நோக்கம்

ஆசிரியர் தொல்காப்பியனாரின் உளக்கிடக்கையை உணர்ந்து உலகிற்குணர்த்தச் சான்றோர் பெருமக்கள் பலரும் காலந்தோறும் முயன்றதனான், தொல்காப்பியப் பழையவுரைகள் ஒன்றினொன்று முரணிக்கிடக்கின்றன. அவ்வுரைகளை ஒப்பிட்டாராய்ந்தால் தொல்காப்பியரின் உளக்கருத்து எளிதிற் புலனாகும். அவ்வகையில், இடையியலிலுள்ள இடைச்சொற் பொதுவிலக்கணத்தைக் கூறும் சூத்திரத்திற்குப் பழையவுரைகளை ஒப்பிட்டாய்ந்து தொல்காப்பியரின் கருத்து யாது என்பதை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் ஆய்வு நோக்கமாம்.

[1]The author is an Associate Professor in the Assistant Professor of Tamil, PSG College of Arts and Science, Coimbatore, Tamilnadu, India. vignesh@psgcas.ac.in

ஆய்வு நெறி

'இடைச்சொற் பொதுவிலக்கணம் – பழையவுரைகள் ஒப்பீடு' என்னுந்தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் தொல்காப்பியச் சொல்லதிகாரம் நுவலும் இடைச்சொற் பொதுவிலக்கணத்தையும் அதற்குப் பழையவுரையாசிரியர்கள் கூறும் விளக்கங்களையும் ஒப்பிட்டாய்தலின், இவ்வாய்வில் "ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு" கையாளப்பட்டுள்ளது.

சொல்லதிகாரப் பழையவுரைகள்

பண்டைத்தமிழிலக்கிய இலக்கண நூல்களுள் உரை பலவாக இயற்றப்பெற்ற நூல் தொல்காப்பியம். முப்பகுப்பினையுடைய இந்நூலின் சொல்லதிகாரத்திற்கு இஞ்ஞான்று அச்சிற்பதிப்பித்து வெளியிடப்பட்ட பழையவுரைகளென இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பெயரறியப்படாத பழையவுரைகாரர் ஒருவர் என்னும் அறுவரின் உரைகள் விளங்குகின்றன. இவ்வுரைகளே பழையவுரைகளென வழங்கப்படுகின்றனவாம்.

சொல்லதிகாரத்திற்கு வாய்த்த பேறு

எழுத்து, சொல், பொருள் என நிற்கும் தொல்காப்பியத்தில் நடுநின்ற சொல்லதிகாரத்திற்கு மட்டும் பழையவுரைகளென மேற்சுட்டிய அறுவருரைகள் உள. அஃதேல், எழுத்து, பொருள் என்பவற்றினும் இடையதிகாரமாம் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரைகள் பல தோன்றியது என்னை? என்ற வினா எழுகின்றது. எழுத்ததிகாரத்தினும், பொருளதிகாரத்தினும் விட இலக்கணங் கற்போர்க்குச் சொல்லதிகாரம் இன்றியமையாதது ஆதலானும், அதற்கு விரிவான விளக்கமும் வேண்டப்பட்டதாலும், 'சொல்' பற்றிய கருத்து வேற்றுமை மிக்கிருத்தலானும் உரையாசிரியர் பலர் இச்சொல்லதிகாரத்திற்குத் தனித்தனியே உரை வரைந்தனர் எனல் தகும். இப்பேறு சொல்லதிகாரத்திற்கே வாய்த்த பேறாகும்.

இனி இடைச்சொற் பொதுவிலக்கணத்தையும் அதற்குப் பழையவுரையாசிரியர்கள் கூறும் விளக்கங்களையும் காண்போம்.

இடைச்சொல்லினியல்பு

இடைச்சொல்லின் இலக்கணமுணர்த்தும் இடையியலின் தலைச்சூத்திரம்,

"இடையெனப்படுப பெயரொடும் வினையொடும்

நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே" (சொல். இடை. நூ. 1)

'இடைச்சொல்லென்று சொல்லப்படுவன பெயர்ச்சொல்லொடும், வினைச்சொல்லொடும் வழக்கிற் பொருந்தி நடக்கும், அவ்வாறன்றித் தாமாக நடக்கும் இயல்பில' என இந்நூற்பா இடைச்சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணங் கூறுகின்றது. இச்சூத்திரத்திற்குப் பழையவுரையாளர்கள் நுவலும் விளக்கங்கள் வருமாறு:

இளம்பூரணர்

இந்நூற்பாவிற்கு இளம்பூரணத்தில் முழுமையான உரையில்லை; கருத்துரை, உதாரணம், சிறப்புரை என்பவே காணப்படுகின்றன. "இச்சூத்திரம் இடைச்சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று" (சொல். இளம். நூ.244) என்பது இளம்பூரணர் தரும் சிறப்புரை. இடைச்சொல் பெயரொடு நடைபெற்றதற்கு 'அதுமன்' (புறம்.147) என்று உதாரணங் காட்டும் இவர், இடைச்சொல் வினையொடு நடைபெற்றதற்கு உதாரணங் காட்டினாரில்லை என்பது ஈண்டுச் சுட்டத்தக்கதாம். அன்றியும், 'தமக்கியல்பிலவே' என்றதனான், 'இடைச்சொற்கள் பகவின்றியே நின்றிசைப்பனவும் உள' எனச் சிறப்புரை கூறுகின்றார் இளம்பூரணர். இதற்கு, 'உண்டான்' என்பதை வரலாறாகக் காட்டுகின்றார்.

சேனாவரையர்

இந்நூற்பாவிற்குச் சேனாவரையர் ஈருரைகளைத் தருகின்றார். அவை வருமாறு :

"இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயரொடும் வினையொடும் வழக்குப்

பெற்றியலும்; தாமாக நடக்கும் இயல்பு இல என்றவாறு''...

“இனி ஓர் உரை:- இடைச் சொற்கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கிற் றோன்றும்' என்பதற்குச் சார்ந்து வருதலான் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் சிறப்பில; இவையுட்படச் சொல் நான்காம் என்பது கருத்தாகலின், இடைச்சொல் பெயரும் வினையும் சார்ந்து வரும் என்னும் வேறுபாடு அதனாற் பெறப்படாது. என்னை? இடைச்சொல் பெயர் சார்ந்தும் உரிச்சொல் வினை சார்ந்தும் வரினும் அவற்றது சிறப்பின்மையும், சொல் நான்காதலும் உணர்த்துதல் சிதையாது ஆகலான். அதனான் இடைச்சொல் பெயரும் வினையும் சார்ந்து வரும் என்பது இச்சூத்திரதாற் கூறல் வேண்டும் என்ப.'' (சொல். சேனா.நூ.256) என்பது சேனாவரையருரை.

இவ்வீருரைகளை நோக்கில்,

அ) இடைச்சொல் பெயர்ப் பொருளையும் வினைப்பொருளையும் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது தமக்கெனப் பொருளுடையவல்ல என்பது முதல் உரை.

ஆ) 'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற்கிளவியும்

அவற்றுவழி மருங்கிற் றோன்றுமென்ப' (பெயர். நூ.5)

என்ற நூற்பாவினால் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து வரும் இவையும்படச் சொல் நான்காம் என்னும் கருத்துப் பெறப்படும். அன்றி, இடைச்சொல் பெயரும் வினையும் சார்ந்துவரும் என்னும் வேறுபாடு இந்நூற்பாவான் பெறப்படாது. ஏனெனில், இடைச்சொல் பெயர் சார்ந்தும், உரிச்சொல் வினை சார்ந்தும் வரினும் அவற்றது சிறப்பின்மையும், சொல் நான்காதலும் என்ற கருத்துச் சிதையாது ஆகலான். அதனான், இடைச்சொல் பெயரும் வினையும் சார்ந்துவரும் என்பது இந்நூற்பாவான் (இடை. 1) பெறப்படும் என்பது இரண்டாம் உரை.

இவையே சேனாவரையருரையின் விளக்கமாம். இங்ஙனமாக ஈருரைகளைத் தரும் சேனாவரையர், இரண்டாம் உரையினிறுதியில், ‘அவ்வுரைவுரைப்பார் பெயரினும் வினையினும் மெய்தடுமாறி (உரி. 1) என்பதற்கும், பெயரும் வினையும் சார்ந்து என்று பொருளுரைப்ப' எனவுரைக்கின்றார். இவர் கூறுமாறுபோல, அவ்வுரைவுரைப்பார்; இவ்வாறு பொருளுரைப்பார் யாரெனத் தெரிந்திலது. ஏனெனில், தொல்காப்பியச் சொல்லதிகாரப் பழையவுரைகளுள் இக்கருத்து எவ்வுரைக்கும் ஏற்பதாயில்லை என்பதும் நோக்கற்பாலதாம்.

தெய்வச்சிலையார்

சேனாவரையரின் இவ்வீருரைகளையும் ஏற்றுக்கூறும் தெய்வச்சிலையார், அவருரைத்தாங்கே இந்நூற்பாவிற்கு ஈருரைகளைத் தருகின்றார்.

அ)சொல் நான்கினுள் இடைச்சொல்லாவது பெயரும் வினையும் போலத் தனித்தனிப் பொருளுணர உச்சரிக்கப்படாது. பெயர் வினைகளைச் சார்ந்து நின்றே பொருளையுணர்த்தும். இது முதல் உரை.

ஆ) இடைச்சொற் கிளவியும் உரிச்சொற்கிளவியும்

அவற்றுவழி மருங்கிற் றோன்றுமென்ப' (பெயர். 5)

எனப்பெயரியல் நூற்பாவான், இடைச்சொல் பெயர் வினைகளின் வழியே வரும் என்பது

உணர்த்தப்பட்டது. எனின், ஈண்டும் இவ்வாறு கூறுதல், கூறியது கூறலன்றோ? என்ற வினா எழும். அதற்கு, “ஆண்டுத்தோற்றுவாய் செய்தார். ஈண்டு இலக்கணம் கூறியுள்ளார்'' (சொல். தெய். நூ.246) என்பதனான், ஆண்டுப் (பெயரியலில்) இடைச்சொல் பெயரையும் வினையையும் சார்ந்து வரும் எனத்தோற்றுவாய் செய்தார். ஈண்டு (இடையியலில்) இடைச்சொல் பெயர் வினைகளைச் சார்ந்து தனக்கெனப் பொருளின்றி வரும் என இடைச்சொல் இலக்கணங் கூறினார் ஆசிரியர். எனவே, இது கூறியது கூறலன்றாம் எனத் தெய்வச்சிலையார் அமைதி காண்கிறார். இஃது இரண்டாவது உரை.

நச்சினார்க்கினியர்

“இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயரும்வினையும் உணர்த்தும் பொருளைச்

சார்ந்து நின்று அவற்றையே வெளிப்படுத்து நடக்கும். தமக்கென வேறோர் பொருளை உணர்த்தும் இலக்கணமுடையவல்ல" என்பது நச்சினார்க்கினியர் தரும் விளக்கமாம்.

கல்லாடனார்

இந்நூற்பாவிற்குக் கல்லாடனார் வழங்கிய சிறப்புரை ஈண்டு நோக்கத்தக்கதாம்.

அவ்வுரை வருமாறு :

"இச்சூத்திரத்தின் பொருண்மையும் இலேசின் பொருண்மையும் 'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற்கிளவியும்' என்ற சூத்திரத்துள்ளும் அதன் இலேசிலுள்ளும் அடங்குமால் எனின், அது நிரல் நிறை வாய்பாட்டதாக பாற்பெயரெனப்பட்டு வரும் என்றும் வினையொடு உரிவரும் என்றும் கொள்ளக் கிடந்தமையின், இடையும் இரண்டொடும் வரும் என்றற்குக் கூறினார் என்பது" (சொல். கல், நூ. 251) எனவுரைக்கும் கல்லாடனார் மேலுங்கூறுவாராய், 'அவ்விலேசு, நிரனிறைச் சூத்திரத்ததாகலாற் புறத்துவழி வருதல் இடைச்சொற்காகவும் உள்வழி வருதல் உரிச்சொற்காகவும் கொள்ளக் கிடக்கும் என்பது கருதி, ஈண்டும் கயானும் இடைவரும் என்பதற்கு இலேசு கூறினார் போலும்' என நன்கு துணிதற்கியலாது ஐயுற்றுரைக்கின்றார்.

பாலசுந்தரனார் கருத்து

தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையாசிரியர் பாவலரேறு. ச. பாலசுந்தரனாரவர்கள் இந்நூற்பாவிற்கு உரைத்துள்ள விளக்கம் ஈண்டு ஒப்புநோக்கத்தகுவதாம். இடைச்சொல் என்பவை பெயரொடும் வினையொடும் வழங்குதலைப் பெற்றியலும்; அவை தாமாக நடக்கும் இயல்பில்லாதன எனக் கருத்துரைக்கும் ச. பாலசுந்தரனார், பால் முதலியவற்றைக் காட்டும் இடைச்சொற்களொடு கூடாமல் நிற்கும் முதனிலைச் சொற்கள் யாவும் உரிச்சொற்களே யாயினும் ஆ, கா, பூ என்றாற் போலவும் வா, போ, கா என்றாற் போலவும் வருமிடத்து வினை முதற் பொருள்தரும் இடைச்சொல்லும், ஏவற்பொருளைத்தரும் இடைச்சொல்லும் குன்றி நின்று பெயராயும், வினையாயும் வரும் ஓரெழுத்து ஒரு மொழியாய் சொற்கள் இருவகை வழக்கினும் நடைபெறுதலானும், தத்தம் பொருளவாய் வரும் இடைச்சொற்களும் வேற்றுமை உருபுகளும், பெயர் வினைகளைச் சார்ந்து வருதலானும் பொதுப்படப் பெயரொடும் வினையொடும் என்றார்

எனவுரைத்து, இதனைப் பின்னர் ஆசிரியர், 'அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென... (இடை. 47) எனக்கூறுதலானும் அறியலாம் என்கிறார். அங்ஙனமே, 'பெயரொடும் வினையொடும் நடைபெறுதல்' என்பதற்கு இவர் கூறும் உரை வருமாறு : "அவற்றிற்கு உறுப்பாகி ஒருங்கு இயலுதலும் அவற்றைச் சார்ந்து இயலுதலுமாம்; தமக்கியல்பிலவே' என்றது தனித்து நின்று தம் பொருள் உணர்த்தா என்றவாறாம். பெயரொடும் வினையொடும் என்றது 'வழிமொழிதல்' அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப (பெயரியல்-5) என்றதனான் இக்கருத்துப் பெறப்படுமாயின் அவற்றொடு ஒருங்கு வரும் என்பதும் அவற்றிற்கு உறுப்பாகவரும் யொடும் என்றது ஈற்றினும் இடையினும் அவற்றிற்கு உறுப்பாக வருமென்பதும் பெறப்பட வைத்தல் இதன் பயனாகும் (ச. பாலசுந்தரனார், சொல். ப. 224) என்பது இவர்தரும் விளக்கமாம்.

இங்ஙனமே மேலும் விளக்கும்முகத்தான், 'அச்சூத்திரத்தில் இடைச்சொல் பெயரொடும் உரிச்சொல் வினையொடும் வரும் எனநிரனிறையாகப் பொருள்கோடற்கும் ஏற்ப நிற்றலான் அதன் பொருள் புலப்பட ஈண்டு விதத்தோதினார்' எனக்காரணங் கூறிவிளக்கி, 'இடைச்சொற்களின் தலையாய இலக்கணமாகிய 'தாமாக நடக்கும் இயல்பில' என்பதற்கும் 'பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் என்பது அவாய் நிலையாக நிற்றலின் இங்ஙனம் கூறுதல் கடப்படாதலையும் அறிக' என இயைபு கூறுகின்றார்.

ஆய்விற் கண்டறியப்பட்ட முடிபுகள் :

இங்ஙனமாக உரையாசிரியன்மார் கூறுமாற்றைத் தொகுத்துநோக்கின்,

- இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயரொடும் வினையொடும் வழக்கிற்

பொருந்தி நடக்கும்; தாமாக நடக்கும் இயல்புஇல என்பது இடைச்சொற் பொதுவிலக்கணம்.

- பெயரியலில் 'இடைச்சொற்கிளவியும் உரிச்சொற்கிளவியும் அவற்றுவழி மருங்கிற் றோன்றும்' (பெயர். 5) எனவரும் நூற்பாவான், இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும் என்னுங் கருத்து வலியுறுத்தப்படுகிறது.
- இடைச்சொல் தனக்கெனத் தனிப்பொருளின்றிப் பெயர்ப்பொருளையும் வினைப்பொருளையும் சார்ந்து அவற்றின் பொருளே தனக்குப் பொருளாகவரும் என்னும் கருத்து ஈண்டு இந்நூற்பாவான் கூறப்படுகின்றது.
- அன்றியும், முன்னையது, இடைச்சொற்கும் உரிச்சொற்குமுரிய பொதுவிலக்கணம்.
- பின்னையது, இடைச்சொற்குச் சிறப்பிலக்கணம்.

என்னுங் கருத்துக்கள் புலப்படுகின்றனவாம்.

முடிவுரை

‘சொல்’ பற்றிய கருத்து வேற்றுமை மிக்கிருத்தலானும் அதற்கு விரிவான விளக்கங்கள் வேண்டப்படுவதானும் உரையாசிரியர் பலர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குத் தனித்தனியே உரை வரைந்தனர். அவ்வகையில், சொல்லதிகாரத்திற்குப் பழையவுரைகளென அறுவர் உரைகள் கிட்டியிருப்பது சொல்லதிகாரத்திற்கு வாய்த்த தனிப்பெரும் பேறாகும். அன்றியும், இவ்வுரையாசிரியர்களின் கருத்துக்கள்தானும் ஓரோர் சூத்திரத்திற்கும் மாறுபடுகின்றன. ஆகலின், ஒவ்வொரு சூத்திரத்திற்கும் அறுவர் உரைகளை ஒருங்குவைத்து நோக்குழி, அச்சூத்திரத்தின் உண்மைப்பொருள் தெளிய விளங்கும், அவ்வகையிற்றானே, சொல்லதிகார இடையியலில் பயின்றுவரும் இடைச்சொற்பொதுவிலக்கணம் நவிலும் சூத்திரத்திற்கு அறுவர் உரைகளையும் ஒப்பிட்டாய்ந்துழி மேற்காண் முடிபுகள் பெறலாகின்றன.

References

Aravintan̲, Mu., Vai. (2008). (Ī eṭiṣan̲), *Uraiyāciriyarkaḷ*. Maṇivācakar Patippakam.

Cuntaramūrtti, ku. (1962). Tolkāppiyam, Sollatikāram, *Nacciṉārkkiṉiyam*. Caivacittānta Nūr̲patippukkal̲akam.

Cuntaramūrtti, ku. (1981). *Tolkāppiyam*, *Sollatikāram*. Aṇṇāmalaip Palkalaikkal̲akam.

Cuntaramūrtti, ku. (1984). *Tolkāppiyam*, *Sollatikāram*, Iḷampūraṇam. Caivacittānta Nūr̲patippukkal̲akam.

Māṇikkam., Va., Cupa. (1987). *Tolkāppiyakkaṭal*. Maṇivācakar Patippakam.

Tēvanēyappāvāṇar, Na & Pūvarākampiḷḷai, A. (1971). *Tolkāppiyam*, *Sollatikāram*. Caivacittāntanūr̲patippu Kal̲akam.

Tolkāppiyam, *Sollatikāram*. *Nacciṉārkkiṉiyar* (1997). Irāma Kōvintacāmippiḷḷai Patippu Caracuvatim.

Tolkāppiyam-Sollatikāram, Teyvaccilaiyārurai. (1929). Karantait Tamil̲ccaṅkap Patippu.